இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

இயேசு பேதுருவையும் யாக்கோபையும் யோவானையும் அழைத்து, ஓர் உயர்ந்த மலைக்கு அவர்களை மட்டும் தனிமையாகக் கூட்டிக்கொண்டு போனார். அங்கே அவர்கள்முன் அவர் தோற்றம் மாறினார். அவருடைய ஆடைகள் இவ்வுலகில் எந்த சலவைக்காரரும் வெளுக்க முடியாத அளவுக்கு வெள்ளை வெளேரென ஒளிவீசின. அப்போது எலியாவும் மோசேயும் அவர்களுக்குத் தோன்றினர். இருவரும் இயேசுவோடு உரையாடிக்கொண்டிருந்தார்கள். (மாற்கு 9:2-)

# சோம்பல் எனும் தீயொழுக்கம் பற்றிய திருத்தந்தையின் தவக்கால அறிவுறுத்தல்



கிறிஸ்துவில் அன்பான சகோதர சகோதரிகளே, வணக்கம்!

எல்லா கொடிய தீயொழுக்கங்களுக்கு இடையில் பெரும்பாலும் கவனிக்கப்படாமல் இருக்கும் ஒன்று சோம்பல். மிக அமைதியாக நமக்குள் நடைபெறும் இத்தீயொழுக்கமானது சோம்பேறித்தனம் மற்றும் மந்தமான மனநிலையால் உருவாகின்றது. உண்மையில் சோம்பல் உருவாகும் காரணத்தை விட அது உருவாக்கும் விளைவுகள் தான் அதிகம். ஒருவன் எந்த வேளையும் செய்யாமல், அலட்சியமாக வெறுமனே உட்கார்ந்து இருக்கின்றபோது, அவனை சோம்பேறி என்று நாம் கூறுகின்றோம்.

சோம்பல் மிகவும் ஆபத்தான சூழலுக்கு நம்மை உட்படுத்துகின்றது. எல்லாவற்றிலும் ஒரு வெறுப்பையும், கடவுளோடு கொண்டுள்ள உறவில் ஆர்வமின்மையையும் கொண்டவர்களாக மாறுகின்றனர். தங்களது கடந்த காலத்தில் இதயத்திற்கு இதமளித்த நற்செயல்கள் மற்றும் தூய செயல்கள் அனைத்தும் இப்போது பலனற்றவையாக அவர்களுக்குத் தோற்றமளிக்கின்றன. கடந்து போகும் இத்தகைய காலத்திற்காக, மனிதனும் அவனுக்குப் பின் இருக்கும் சீர்படுத்த முடியாத சரிசெய்ய முடியாத இளமைப்பருவமும் வருந்துகின்றது.

நண்பகல் அலகை என்று அழைக்கப்படும் சோம்பல் ஒரு நாளின் நண்பகல் வேளையில் உருவாகின்றது. சோம்பல் அதன் உச்சியில் இருக்கும்போது, நம்முன் இருக்கும் நேரங்கள் மிகவும் சலிப்பானதாகவும், வாழ்வதற்கு உகந்ததல்லாதவைகள் போன்றும் காட்சியளிக்கின்றன. எவாகிரியோ என்னும் துறவி சோம்பல் குறித்து இவ்வாறு கூறுகின்றார். ”சோம்பல் கொண்டவரின் கண்கள் எப்போதும் சன்னலைப் பார்த்தபடியே இருக்கும். அவரது மனம், கற்பனையில் பலரைச் சந்தித்துக் கொண்டிருக்கும். படிக்கும்போது தலைகவிழ்ந்து அடிக்கடி கொட்டாவி விட்டுக்கொண்டிருப்பார். சோம்பலினால் வரும் தூக்கத்தைத் தவிர்க்க, அடிக்கடி கண்களைக் கசக்குகின்றார், கைகளைத் தேய்க்கின்றார், புத்தகத்திலிருந்து தன் பார்வையை விலக்கி சுவரைப் பார்க்கின்றார். மறுபடியும் புத்தகத்தைப் பார்க்கும் நபர் கொஞ்ச நேரம் வாசித்துவிட்டு இறுதியில் தலையைத் தாழ்த்தி அப்புத்தகத்தின் அடியிலேயே சிறிது உறங்கி விடுகின்றார். பசி மற்றும் அவரது அடிப்படைத் தேவைகளுக்காக மீண்டும் அவராக எழும்பும் வரையில் அப்படியே உறங்குகின்றார். இத்தகைய சோம்பல் கொண்ட மனிதரால் கடவுளின் பணியினை உடனடியாக நிறைவேற்றுவது இயலாததாகின்றது என்று நிறைவுசெய்கின்றார் துறவி எவாகிரியோ.

உண்மையில், சோம்பேறித்தனத்தால் பிடிக்கப்பட்டவர்களுக்கு, வாழ்க்கை என்பது அர்த்தமற்றதாகிறது. அவர்கள் வாழ்வின் அர்த்தத்தை இழக்கிறார்கள். அவர்களது இறைவேண்டல் கூட சலிப்பானதாகவும், எதிர்கொள்ளும் ஒவ்வொரு நிகழ்வும் அர்த்தமற்றதாகவும் மாறிவிடுகின்றது. இளமையில் ஊட்டத்தைத் தந்த விருப்பங்கள், நியாயமற்றவைகள் போன்றும், கண்ட கனவுகள் மகிழ்ச்சியைத் தராதவைகளாகவும் மாறிவிடுகின்றன. இதனால் கவனச்சிதறலுக்கும் எதையும் சிந்திக்காமல் இருப்பதற்கும், அதிலிருந்து வெளியேறுவது ஒன்றை மட்டும் வழியாகக் கொண்டவர்களாகவும் மாறுகின்றார்கள். மேலும் முற்றிலும் வெறுமையான மனதைக் கொண்டவர்களாகவும், முன்கூட்டியே இறப்பைத் தேடுபவர்களாகவும் மாறுகின்றனர்.

மிகவும் ஆபத்தான இந்த தீமையை எதிர்கொள்ளும்போது நாம் கடைபிடிக்கவேண்டிய பல்வேறு தீர்வுகளை ஆன்மிகத் தலைவர்கள் வழங்குகின்றனர். எது மிக முக்கியமானதோ அதை நம்பிக்கையின் பொறுமை என்று கூறுகின்றனர். சோம்பல் என்னும் தீயொழுக்கத்தின் அடியில் மனிதனின் விருப்பமானது வேறு இடத்தில் இருக்கும். அதிலிருந்து நாம் மீள கடவுளின் திருமுன் எனது இருப்பு, நேரம், சூழல் எப்படி உள்ளது என்பதைப் பற்றி சிந்திக்கவும், வரவேற்கவும் நாம் தயாராக இருக்கவேண்டும். தாங்கள் வாழ்கின்ற சிறு அறை தங்களது வாழ்க்கையின் மிகச்சிறந்த ஆசிரியர் என்று துறவிகள் கூறுகின்றனர். ஏனெனில் நாம் தங்கி இருக்கும் இடம் இறைவனோடு மிக அன்போடு நமது வாழ்க்கையைப் பற்றி தினமும் பேசும் இடம். அலகையானது நமது இப்போதைய இருப்பு நேரம் பற்றி சிந்திக்கும் மகிழ்ச்சியை நன்றியுணர்வை அழிக்க நினைக்கின்றது. எல்லாமே வீண், அர்த்தமற்றது, எதையும், யாரையும் பாதுகாப்பது, பராமரிப்பது தேவையற்றது என நம்மை நம்ப வைக்க அலகை முயற்சிக்கின்றது.

சோம்பலினால் பாதிக்கப்பட்டு அலைந்து கொண்டிருக்கும் எத்தனையோ மனிதர்களை நாம் பார்க்கின்றோம். இவர்கள் தாங்கள் மேற்கொண்ட பாதையை அறிவற்றத்தனமாகக் கைவிட்டிருக்கின்றார்கள். சோம்பல் என்பது உறுதியான போர், எனவே நாம் அதன் எல்லா நிலையிலும் வெற்றி பெறவேண்டும். புனிதர்களைக் கூட விட்டுவைக்காதது சோம்பல் என்பதை அவர்களின் வரலாற்றுக் குறிப்பில் உள்ள சில பக்கங்கள் தெளிவுபடுத்துகின்றன.

எல்லாமே இருளாகிப்போன நேரங்கள், சிக்கலான பயங்கரமான தருணங்கள், உண்மையான உறுதியான நம்பிக்கை கொண்ட இரவுகள், என்று அவர்கள் எடுத்துரைக்கும் பகுதிகள் இத்தகைய சோம்பலினால் தாக்கப்பட்ட இடங்களாகும்.

சோம்பலின் முயற்சியால் துன்புறும் நமது நம்பிக்கையானது, அதன் மதிப்பை ஒருபோதும் இழக்காது. உண்மையான மனித நம்பிக்கையானது ஒளி இழக்கச்செய்யும் எல்லா இருளான சூழல் இருந்த போதிலும் தாழ்ச்சியுடன் தன் நம்பிக்கையில் இருக்கின்றது. இத்தகைய நம்பிக்கையானது நமது இதயத்தில் நிலைத்து நிற்கின்றது. சாம்பலுக்குள் மறைந்திருக்கும் தீக்கனல்கள் போல எப்போதும் நிலைத்திருக்கும். சோம்பல் என்னும் தீயொழுக்கத்தில் நாம் விழ நேரும் போது அல்லது அதற்கான சூழல் ஏற்படும்போது, நமக்குள் நாமே பார்த்து நம்பிக்கையின் தீக்கனல்களைப் பாதுகாத்து முன்னேறிச் செல்வோம் என்று கருத்துரைத்தார்.

## ஈப்போ, புனித லூர்து அன்னை பங்கு தனது 22-வது குருவானவரை ஈன்றது!

**இப்பங்கைச் சேர்ந்த திருத்தொண்டர் ஜோர்ஜ் வைத்தியநாதன் அவர்களின் குருத்துவ அருள்பொழிவு நிகழ்வு கடந்த 2 பிப்ரவரி 2024 அன்று இங்கு கொண்டாடப்பட்டது.**

அன்று, வெள்ளிக்கிழமை மாலை மணி 7.00க்கு பதினெட்டு ஆண்டுகளுக்குப் பிறகு புனித லூர்து அன்னை தேவாலயத்தில் நடைபெறும் குருத்துவ அருள்பொழிவு விழா இதுவேயாகும். மேலும், திருத்தொண்டர் ஜோர்ஜ் வைத்தியநாதன் அவர்கள் இவ்வாலயத்தில் இருபத்திரண்டாவது மைந்தனாக குருத்துவ திருநிலைப்படுத்தப்பட்டார் என்பதும், இவர் இப்பங்கில் திருமுழுக்கு முதல் அனைத்து அருளடையாளங்களையும் பெற்றவர் என்பது மிகவும் குறிப்பிடத்தக்கது.

தொடர்ச்சி, அடுத்தப்பக்கம்



இடமிருந்து மூத்த சகோதரர் ஜூட், தாயார் திருமதி விரோனிக்கா அந்துவான், அருள்தந்தை ஜோர்ஜ் மற்றும் தந்தை திரு வைத்தியநாதன்

# திருத்தொண்டர் ஜோர்ஜ் வைத்தியநாதன் அவர்களின் குருத்துவ அருள்பொழிவு விழா

இக்குருத்துவ திருநிலைப்படுத்தும் திருப்பலியை பினாங்கு மறைமாவட்ட ஆயர் கர்தினால் செபஸ்தியன் பிரான்சிஸ் அவர்களும், கோலாலம்பூர் மாமறைமாவட்டத்தின் பேராயர் ஜூலியன் லியாவ் அவர்களும் கூட்டுத் திருப்பலியாகக் கொண்டாடினார்கள். இவ்வைபவத்தில் ஐம்பதிற்கும் மேற்பட்ட அருட்பணியாளர்களும், திருத்தொண்டர்களும், துறவர சபையை



சேர்ந்த அருட்சகோதர சகோதரிகளும் கலந்துக்கொண்டனர். அருகிலிருந்தும் தொலைவிலிருந்து ஆயிரக்கணக்கான மக்களும் இந்த அருட்சாதனக கொண்டாட்டத்தில் பங்கு பெற்றனர்.

திரு. வைத்தியநாதன்- விரோனிக்கா அந்துவான் தம்பதியினரின் இரண்டாவது புதல்வரான புதிய அருள்பணியாளர் ஜோர்ஜ் வைத்தியநாதன் அவர்களுக்கு ஒரு மூத்த சகோதரர் இருக்கிறார். மேலும் இவர் ஈப்போவில் பிறந்து வளர்ந்த மண்ணின் மைந்தராவார்.

இவர் ஆரம்ப கல்வி முதல் உயர்நிலை கல்வி வரை ஈப்போ புனித மைக்கல் பள்ளியில் பயின்றவர். பின்னர் துன் அப்துல் ரசாக் பல்கலைகழகத்தில் வாணிப நிர்வாகத் துறையில் இளங்கலை பட்டம் பெற்றவர். தொடர்ந்து, பினாங்கு "INTI" பல்கலைக் கழகத்தில் வாணிப நிர்வாகத் துறையில் முதுகலை பட்டம் பெற்றார். மேலும், "U.K. Hertfordshire "பல்கலைகழகத்தில் கலைத் துறை நிர்வாகத்தில் முதுகலை பட்டம் பெற்றவர் ஆவார். கல்வித்துறையில் மூன்று பட்டங்கள் பெற்ற இவர் ஐந்து ஆண்டு காலம் பினாங்கு இன்டெல் (INTEL) நிறுவனத்தில் பணி புரிந்துள்ளார்.

தமது 5-ம் படிவ இடைநிலைக் கல்வியை முடித்தவுடன் 2005-ல் தற்காலிக ஆசிரியராகவும் பணிபுரிந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இவர் 2016ல் தேவ அழைப்பிற்கேற்ப, பினாங்கு காலேஜ் ஜெனரலில் குருமாணவராக சேர்ந்தார். இரு ஆண்டு காலம் மெய்யியல் துறையிலும், நான்கு ஆண்டு காலம் இறையியல் துறையிலும் பயின்றார். குருத்துவ துறவர பயிற்சிகளை பினாங்கு மறைமாவட்டத்திலும், கூச்சிங் மாமறைமாவட்டத்திலும் மேற்கொண்டார். இவரது திருத்தொண்டர் திருநிலைப்படுத்தும் திருச்சடங்கு 17.8.2023-ல் கம்பார், திருஇருதய ஆண்டவர் ஆலயத்தில் நடந்தேறியது.

அருட்பணி ஜோர்ஜ் வைத்தியநாதன் அவர்கள் தமது குருத்துவ திருநிலைப் பாட்டிற்குரிய மையக்கருத்தாக 2 கொரி. 12:9-ல், ‘என் அருள் உனக்கு போதுமானது’ என்ற வசனத்தை தேர்வு செய்து, இறைவன் தம் வாழ்வில் அருளிய அனைத்து ஆசீருக்காக நன்றி கூறினார். மேலும் தமது இம்முக்கிய நிகழ்வில் கலந்துக் கொண்ட அனைவருக்கும், தன்னை ஒரு அருள்பணியாளராகச் செதுக்கிய அனைத்து கல்லூரி



*கார்தினால் செபஸ்தியன் பிரான்சிஸ், பேராயர் ஜூலியன், Msgr ஜேம்ஸ் ஞானபிரகாசம் ஆகியோ ருடன் அருள்தந்தை ஜோர்ஜ் வைத்திநாதன்*

பேராசிரியர்களுக்கும், அருள் பொழிவை நிறைவேற்றிய கர்தினால் செபஸ்தியன் அவர்களுக்கும், தனது மனமார்ந்த நன்றியை பதிவுச் செய்தார். குறிப்பாக தம்மோடு பயணித்து வரும் பங்கு தந்தை ரோபர்ட் டேனியல் அவர்களுக்கு தமது முதற்கண் நன்றியை தெரிவித்துக் கொண்டார்.

*-திருமதி குளோரியா மெத்யூஸ், ஈப்போ*

**‘கடவுள் தன் இல்லத்தை நம் இதயங்களில் அமைத்துக் கொள்ள உதவ, நமக்குள்ளேயே நாம் மேற்கொள்ளும் போராட்டமே கிறிஸ்தவ தியான முயற்சிகள்’**

**திருத்தந்தை பிரான்சிஸ்**

# கிள்ளான், புனித லூர்து அன்னை திருவிழா பல்லின இறைமக்களால் கொண்டாடப்பட்டது

கிள்ளான்: இங்கு 1928-ல் தோற்றுவிக்கப்பட்ட புனித லூர்து அன்னை பங்கின் ஆண்டு திருவிழா கடந்த, பிப்ரவரி 3ஆம் திகதி முதல் 11ஆம் திகதி வரை அனுதின நவநாள் திருப்பலியுடன், சிறப்பாக



கொண்டாடப்பட்டது. இவ்வாண்டு **“பிறர் உங்களுக்குச் செய்ய வேண்டும் என விரும்புகிறவற்றை எல்லாம் நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்- மனித சகோதரத்துவத்தை திருஅவையாக கொண்டாடுதல்”** என்பது மையக்கருத்தாகக் கொள்ளப் பட்டது.

ஒன்பது நாள் நவநாள் திருப்பலிகளுக்கு ஜொகூர், பினாங்கு மற்றும் கோலாலம்பூர் மறைமாவட்டத்திலிருந்து அருட்பணியார்கள் தலைமையேற்றார்கள். ஒவ்வொரு நாளும் இளைஞர்கள், குடும்பம், திருஅவை, சூழலியலில், சமூகம், தலைமைத்துவம் மற்றும் மன நலத்தில் ஒன்றிப்பு, பங்கெடுப்பு மற்றும் மறைத் தூதுரை என்னும் துணைக்கருப் பொருள்களில் அருளப்பணியாளர்கள் மிகவும் சிறப்பாக மறையுரையாற்றி திருப் பலியைக் கொண்டாடினர்.

பிப்ரவரி 11 ஆம் தேதி மாலை 6.00 மணிக்கு பன்மொழிகளில், பேராயர் ஜூலியன் லியாவ் அவர்களின் தலைமையில் திருப்பலி கொண்டாடப்பட்டது. அவரோடு சேர்ந்து அருள்ப்பணியாளர்கள் கிரிகோரி சான், ஞானச்செல்வம் மற்றும் இப்பங்கு ஈன்றெடுத்த அருள்ப்பணியாளர்கள் அ. அமலநாதன், பீட்டர் அந்தோனி, வின்செண்ட் தோமஸ், போனவென்சர் இராயப்பன், ஆல்பர்ட் ஆரோக்கியசாமி இவர்களோடு, இரு நைஜீரியா அருள்பணியாளர்களான சைமன் அக்போ, மைக்கேல் அடைவாய் ஆகியோரும் திருப் பலியைக் கொண்டாடினர்.

திருப்பலிக்குப் பிறகு ஏறக்குறைய, 2000 மெழுகுவர்த்தி பவனியில் இறைமக்களுடன் பேராயர் மற்றும் அருள்பணியாளர்களும் ஜாலான் தெங்கு கிளானா வழியாக 'லிட்டில் இந்தியா' பகுதிக்குச் சென்று திரும்பினர். பேராயர் நற்கருணை கதிர்பாத்திரத்தை ஏந்தியவாறு முன்னே செல்ல, நன்கு அலங்கரிக்கப்பட்ட அன்னை மரியின் சுரூபம் பின் தொடர்ந்த்து. நிறைவாக லூர்து அன்னை கெபியின் முன் நற்கருணை ஆசிர்வாதத்தோடு விழா ஒரு நிறைவை எய்தியது. அதன் பிறகு மூத்த அருள் பணியாளர் அ. அமலநாதன் அவர்களின் 55ஆம் ஆண்டு குருத்துவ விழா அனிச்சல்



55-ம் ஆண்டு குருத்துவப் பொன்விழா அனிச்சலுடன் அருள்தந்தை அ. அமலா

வெட்டி சிறப்பு செய்யப்பட்டது.

உலக நோயாளிகளின் தினத்தை முன்னிட்டு புற்று நோயால் பாதிக்கப் பட்டவர்களுக்கு நாம் எவ்வாறு உதவலாம் என்ற சிந்தனைக்குரிய கருத்தில் ஒரு சொற்பொழிவு ஏற்பாடு செய்ய்ப்பட் டிருந்தது. மேலும் ஞாயிறுக்கிழமையன்று, அனைத்து திருப்பலிகளிலும் நோயாளிகளுக்கு திருத்தைலம் பூசி குணம் அளிக்கும் அருளடையாளக் கொண்டாட்டம் இடம் பெற்றது.

இதற்கிடையில், இளைஞர்கள் மாநாடு கடந்த 3 & 4 தேதிகளில் ‘என்னை ஒரு கருவியாக்கும்’ என்ற மையக்கருத்தில் நடைபெற்றது. ஏறக்குறைய 200 இளைஞர்கள் இந்த மாநாட்டில் கலந்து கொண்டு அவர்களின் ஆன்மிக வாழ்வில் மிகவும் ஆழப்படுத்தினார்கள்.

நேசா தேவசகாயம்.

# இறைநம்பிக்கையே வாழ்வின் ஆதாரம்!

இன்று தவக்காலத்தின் 2-ஆம் வாரம். இன்றைய முதல் வாசத்தில், ஆபிரகாமின் இறைநம்பிக்கையையும் கீழ்ப்படிதலையும் கடவுள் எவ்வாறு ஆழந்து அறிய முன்படுகிறார் என்பதை அறிகிறோம். ஆபிரகாமின் ஆழ்ந்த நம்பிக்கையை நிரூபிக்கும் விதமாக, அவரது அன்பு மகனான ஈசாக்கைப் பலியிடும்படி கடவுள் கேட்டார். அவரும் துணிகிறார்.

நம்பிக்கையில் ஆபிரகாமைப் போல் நாமும் இருக்க வேண்டுமெனும் எதிர்பார்ப்போடு, அவரது இக்கதை தவக்காலத் தொடக்கத்திலேயே முன்வைக்கப்படுகிறது. வயது முதிர்ந்த ஆபிரகாமிற்கு ஒரு மகனையும் கொடுத்தக் கடவுள் அவனைப் பலியிட வேண்டும் எனக் கேட்பாரா? கடவுள் என்ன இதயமற்றவரா? எனும் கேள்வி நம்மில் எழக்கூடும். உண்மை அதுவல்ல. கடவுள் இரக்கத்தின் ஊற்று.

இறுதியில், கடவுள் ஆபிரகாமின் கீழ்ப்படிதலையும் உண்மைத்தன்மையையும் ஏற்றக்கொண்ட கடவுள், வெகுமதியாக அவருக்கு பெரும் ஆசீர்வாதங்களையும் ஏராளமான சந்ததியினரையும் உறுதியளித்தார்.



இன்றைய நற்செய்தியில் நாம் வாசிக்கும் ‘இயேசு தோற்றம் மாறுதல்” (மாற்கு9:2-10) நிகழ்வும் இதே கருத்தையே முன்வைக்கிறது. மோசே மற்றும் எலியாவின் பிரசன்னம் இயேசு பழைய உடன் படிக்கையின் நிறைவேற்றம் மற்றும் பழைய ஏற்பாட்டில் கொடுக்கப்பட்ட வாக்குறுதிகளை எடுத்துக்காட்டுகிறது. மோரிய மலைக்கு மகனை அழைத்துக் சென்ற ஆபிரகாம் நொறுங்கிய உள்ளத்தோடு சென்றார். தபோர் மலை ஏறியச் சீடர்கள் பதற்றமான உள்ளத்தோடு சென்றனர். கல்வாரி மலைக்குச் சிலுவையோடு சென்ற இயேசு பாரமான உள்ளத்தோடு சென்றார். மலைக்கு ஏறியதும் நொறுங்கிய, பதற்றமான, பாரமான உள்ளங்கள் அமைதிக் கண்டன. ஒருவரே நமது கடவுள், அவரே அனைத்திற்கும் மேலானவர் என்ற முழு நம்பிக்கை, நொறுங்கிய உள்ளத்தையும் பதற்றமான உள்ளத்தையும் பாரமான உள்ளத்தையும் சாந்தமடையச் செய்கிறது.

“கடவுள் நம் சார்பில் இருக்கும் போது, நமக்கு எதிராக இருப்பவர் யார்?” (உரோ.8:31) என இரண்டாம் வாசகத்தில் கூறுகிறார் புனித பவுல். முழு இறைநம்பிக்கையே வாழ்வின் ஆதாரம் (உரோ.5:1) என்பது தெளிவாகிறது.

**தவக்காலம் 2-ஆம் ஞயிறு**

| | |
|---|---|
| முதல் வாசகம் | தொ.நூ. 22:1-2,9-13,15-18 13: 1-2, 44-46 |
| திரு.பாடல் | 16: 10,15. 16-17. 18-19 |
| 2-ம் வாசகம் | உரோ 8: 31b-34 - 11: 1 |
| நற்செய்தி | மாற்கு 9: 2-10 |

**ஞாயிறு வாசகம் ஆண்டு 2 (B)**
**வாரநாள் முதல் வாசகம் -ஆண்டு 2**
**திருப்புகழ் மாலை- வாரம் 2**

திருவிவிலியத்தில் ‘செவிசாய்த்தல்’ என்றால் கேட்பது மட்டும் கிடையாது; கேட்டதன்படி நடப்பதும் ஆகும். எனவே, நாம் இயேசுவின் கட்டளைகளின் படி... தந்தைக் கடவுளின் திருவுளத்தின்படி நடப்போம். அதன்வழியாக இறையருளை நிறைவாகப் பெறுவோம். இத்தவக்காலம் கடவுளின் அருளின் காலம் என்பதை மனதில் கொள்வம்.

*அந்தோணி இன்னாசி, சைபர்ஜெயா, சிலாங்கூர்*